ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தந்தை காலில் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தந்தை காலில் ॥

## திருவழுந்தூர் - 1

‡தந்தை காலில் பெரு விலங்கு⋆
தாள் அவிழ⋆ நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார்⋆
மருவி நின்ற ஊர்போலும்⋆
முந்தி வானம் மழை பொழியும்⋆
மூவா உருவில் மறையாளர்⋆
அந்தி மூன்றும் அனல் ஓம்பும்⋆
அணியார் வீதி அழுந்தூரே (1)

பாரித்தெழுந்த⋆ படை மன்னர்
தம்மை மாள⋆ பாரதத்துத்-
தேரில் பாகனாய் ஊர்ந்த⋆
தேவ தேவன் ஊர்போலும்⋆
நீரில் பணைத்த நெடு வாளைக்கு⋆
அஞ்சிப் போன குருகினங்கள்⋆
ஆரல் கவுளோடருகணையும்⋆
அணியார் வயல்சூழ் அழுந்தூரே (2)

செம் பொன் மதிள் சூழ் தென் இலங்கைக்-
கிறைவன்⋆ சிரங்கள் ஐயிரண்டும்⋆
உம்பர் வாளிக்கிலக்காக⋆
உதிர்த்த உரவோன் ஊர்போலும்⋆
கொம்பில் ஆர்ந்த மாதவிமேல்⋆
கோதி மேய்ந்த வண்டினங்கள்⋆
அம்பராவும் கண் மடவார்⋆
ஐம்பால் அணையும் அழுந்தூரே (3)

வெள்ளத்துள் ஓர் ஆலிலைமேல்
மேவி⋆ அடியேன் மனம் புகுந்து⋆ என்
உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும்⋆
நின்றார் நின்ற ஊர்போலும்⋆
புள்ளுப் பிள்ளைக்கிரை தேடிப்⋆
போன காதல் பெடையோடும்⋆
அள்ளல் செறுவில் கயல் நாடும்⋆
அணியார் வயல் சூழ் அழுந்தூரே (4)

பகலும் இரவும் தானேயாய்ப்⋆
பாரும் விண்ணும் தானேயாய்⋆
நிகரில் சுடராய் இருளாகி⋆
நின்றார் நின்ற ஊர்போலும்⋆
துகிலின் கொடியும் தேர்த் துகளும்⋆
துன்னி மாதர் கூந்தல்வாய்⋆
அகிலின் புகையால் முகில் ஏய்க்கும்⋆
அணியார் வீதி அழுந்தூரே (5)

ஏடிலங்கு தாமரை போல்⋆
செவ்வாய் முறுவல் செய்தருளி⋆
மாடு வந்தென் மனம் புகுந்து⋆
நின்றார் நின்ற ஊர்போலும்⋆
நீடு மாடத் தனிச் சூலம்⋆
போழக் கொண்டல் துளி தூவ⋆
ஆடல் அரவத் தார்ப்போவா⋆
அணியார் வீதி அழுந்தூரே (6)

மாலைப் புகுந்து மலரணைமேல்⋆
வைகி அடியேன் மனம் புகுந்து⋆ என்
நீலக் கண்கள் பனி மல்க⋆
நின்றார் நின்ற ஊர்போலும்⋆
வேலைக் கடல்போல் நெடு வீதி⋆
விண் தோய் சுதை வெண் மணி மாடத்து⋆

ஆலைப் புகையால் அழல் கதிரை
மறைக்கும்⋆ வீதி அழுந்தூரே (7)

வஞ்சி மருங்குல் இடை நோவ⋆
மணந்து நின்ற கனவகத்து⋆ என்
நெஞ்சு நிறையக் கை கூப்பி⋆
நின்றார் நின்ற ஊர்போலும்⋆
பஞ்சி அன்ன மெல்லடி⋆
நற்பாவைமார்கள்⋆ ஆடகத்தின்
அஞ்சிலம்பின் ஆர்ப்போவா⋆
அணியார் வீதி அழுந்தூரே (8)

என் ஐம் புலனும் எழிலும் கொண்டு⋆
இங்கே நெருநல் எழுந்தருளி⋆
பொன்னம் கலைகள் மெலிவெய்தப்⋆
போன புனிதர் ஊர்போலும்⋆
மன்னு முது நீர் அரவிந்த மலர்மேல்⋆
வரி வண்டிசை பாட⋆
அன்னம் பெடையோடுடன் ஆடும்⋆
அணியார் வயல் சூழ் அழுந்தூரே (9)

‡நெல்லில் குவளை கண் காட்ட⋆
நீரில் குமுதம் வாய் காட்ட⋆
அல்லிக் கமலம் முகம் காட்டும் கழனி⋆
அழுந்தூர் நின்றானை⋆
வல்லிப் பொதும்பில் குயில் கூவும்⋆
மங்கை வேந்தன் பரகாலன்⋆
சொல்லில் பொலிந்த தமிழ் மாலை⋆
சொல்லப் பாவம் நில்லாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥